தமிழ் நாடு சட்ட மன்றம்

செவ்வாய்க் கிழமை, 1973 மார்ச் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் [திரு. சி. பி. சிற்றரசு] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

1. வினாக்கள்—விடைகள்

Transfer of Teachers

*274 *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) how many Graduate Teachers and Headmasters working in Government High Schools had applied for transfers prior to 1st April 1971, and how many of those applications were pending consideration on that date ;

(*b*) among them, how many were complied with during the year 1st April 1971 to 31st March 1972 ;

(*c*) how many more are still pending ; and

(*d*) whether any uniform and impartial rule is being followed in these transfers ?

ஆசிரியர்கள் மாற்றம்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1–4–1971 ஆம் நாளுக்கு முன்னர், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் எத்தனை பேர் இடம் மாற்றங்கோரி விண்ணப்பம் செய்தனர் ? அந்த நாளில் முடிவுறு நிலையிலுள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) 1-4-1971 ஆம் நாளிலிருந்து 31-3-1972 ஆம் நாள் வரை எத்தனை பேருடைய விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன ?

127-5—1A

[1973 மார்ச் 27

(உ) இன்னும் முடிவுரு நிலையிலுள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஏ) இந்த இட மாற்றங்களில் ஒரே மாதிரியான, பாரபட்ச மல்லாத விதி பின்பற்றப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) (i) ஏறத் தாழ 285 பேர். (ii) 169 பேர்.

(இ) 140 பேர்.

(உ) 29 பேர்.

(ஏ) ஆம்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, இம்மாதிரியாக ஆசிரியர்களையும், தலைமையாசிரியர்களையும் மாற்றுவதற்கு இந்தத் தேதிக்குள்ளாகத்தான் மனுச் செய்து கொள்ள வேண்டுமென்று விதி இருக்கின்றதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் கணவன் மனைவியர்கள் ஒரே ஊரில் இருப்பார்களானால், அவர்களை அதே ஊரில் கட்டாயமாக வைக்க வழி செய்ய வேண்டும், மாற்றக்கூடாது என்று அரசு ஏதேனும் வழிவகை களுக்கு ஆலோசனை கூறியிருக்கின்றதா என்று அறிய விரும்பு கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்பேர்ப்பட்ட மாற்றங்களையெல்லாம் பெரும்பாலும் கோடை விடுமுறைகளில், பள்ளிகள் துவக்குவதற்கு முன்னால்தான் செய்ய வேண்டும் என்று பொதுவாக விதி முறைகள் இருக்கின்றன. ஆகவே கூடுமானவரையில் கணவன் மனைவி மார்கள் அதே இடத்திலேயே வசிப்பதற்கு வசதி செய்து தர வேண்டுமென்பதுதான் விதியாக இருக்கின்றது. நிர்வாகக் காரணங்களுக்காகவோ அல்லது வேறு ஏதேனும் காரணங் களுக்காகவோ, பதவி உயர்வு காரணமாகவோ அல்லது அந்த இடத்திலே இருக்கக்கூடாது என்று ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருக்கின்ற காலத்திலோ இந்த நிலைமை ஏற்படக்கூடும். ஆனால் கூடுமானவரையில் இருவரையும் பிரிக்காமல் ஒரே இடத்தில் பணியாற்றக்கூடிய வகையில் வசதி செய்ய வேண்டுமென்பதுதான் விதியில் கூறப்பட்டுள்ளது.